

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 55 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 18 – வெள்ளிக்கிழமை 04 அக்டோபர் 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 55 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 18 - Friday 04 October 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## முதல்வர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில் - நாட்டிலேயே

# தொழிற்சாலைகள் - வேலைவாய்ப்பில் தமிழ்நாடு முதலிடம்!



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 156–வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (2.10.2024) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளு மன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்க பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், த.வேலு, ஜோசப் சாமுவேல், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## உத்தமர் காந்தியடிகளின் 156வது பிறந்த நாள்!

### திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் - மாலை அணிவித்து மரியாதை!

**சென்னை, அக்.4-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தமர் காந்தியடிகளின் 156வது பிறந்த நாளில் அவர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உத்தமர் காந்தியடிகளின் 156வது பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் (2.10.2024) காலை 9.30 மணியளவில் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

உத்தமர் காந்தியடிகள் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் குஜராத் மாநிலம் போர்பந்தரில் பிறந்தார். தம்முடைய 18 வயதில் பள் ளிப்படிப்பை முடித்து, இங்கிலாந்து சென்று சட்டக்கல்வி பயின்றார். கோபால கிருஷ்ண கோகலே, ரவீந்திர நாத்தாகூர்போன்றோருடன்இணைந்து அண்ணல் காந்தியடிகள் அவர்கள் இந் திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

தமிழ்நாடு அரசால் உத்தமர் காந்தி யடிகளின் தியாகத்தைப் போற்றிச் சிறப் பிக்கும் வகையில் சென்னை, கிண்டி மற்றும் கன்னியாகுமரியில் காந்தி மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உத்தமர் காந்தியடிகளின் புகழுக்கு, பெருமை சேர்க்கும் வகையில் 15.8.2022 அன்று முதலமைச்சர் அவர்களால் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமத்துவமும், சகோதரத்துவ மும் இந்த மண்ணில் தழைக்கட்டும், வெறுப்புணர்வைத் தூண்டும் சக்தி களுக்கு இங்கு என்றும் இடமில்லை, இது காந்திய மண் எனச் சூளுரைப்போம் என்று உத்தமர் காந் தியடிகளின் தியாக வாழ்க்கையைப் போற்றியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.10.2024) மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளில், எழும்பூர், அரசு அருங் காட்சியகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணி வித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஒன்றிய அரசின் புள்ளியியல் அமைச்சக ஆய்வில் தகவல்!

**சென்னை, அக்.4 -**

**ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2023-2024ம் ஆண்டுக்கான கள ஆய்வு மற் றும் கணக்கெடுப்பு நடத்தியதில் உற்பத்தி தொழிலில் 7.5 சதவீதம் வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும், நாட்டிலேயே அதிக தொழிற்சாலைகள் மற்றும் வேலை வாய்ப்பில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது தெரிய வந்துள்ளது.**

கடந்த 2023ம் ஆண்டு நவம்பர் முதல் 2024 ஜீன் வரையிலான காலத் தில் புள்ளியியல் மற்றும் திட்ட அமா லாக்க அமைச்சகத்தின் ஆண்டுத் தொழில் ஆய்வு நடத்தப்பட்டது. அதன் படி, கடந்த உற்பத்தி தொழில்களில் வேலை செய்யும் நபர்களின் வேலை வாய்ப்பு எண்ணிக்கை கடந்த 2022-2023ம் ஆண்டில் 1.72 கோடியாக இருந்தது. அது தற்போது உயர்ந்து 1.85 கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது 7.5 சதவீதம் அதிகரித்துள்ளது என்று இந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றுக்கு முன்பு (2018-2019) இருந்த வேலை வாய்ப்பைவிட 2022-2023ம் ஆண் டில் வேலைவாய்ப்பு 22.14 லட்சமாக உயர்ந்துள்ளது. சராசரி ஊதியமும் அதிகரித்துள்ளது . உற்பத்தி துறையில் ஈடுபடும் நபர்களின் ஊதியத்தை 2021-2022ம் ஆண்டு மற்றும் 2022-2023ம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது தனிநபர் ஊதியம் 6.3 சதவீதம் அதிகரித்துள்ளது.

### முதலீடுகள் உயர்ந்துள்ளது!

2021-2022ம் ஆண்டில் தொழிற்சா லைகளில் 1 கோடியே 72 லட்சத்து 15 ஆயிரத்து 350 பேர் வேலை வாய்ப்பு பெற்றிருந்தனர். அந்த எண்ணிக்கை 2022-2023ம் ஆண்டில் 1 கோடியே 84 லட்சத்து 94 ஆயிரத்து 962 ஆக அதி கரித்துள்ளது. மொத்த மதிப்புக் கூட்டலை பொருத்தவரையில் 2021-2022ம் ஆண்டைவிட 2022-2023ம் ஆண் டில் தற்போதைய விலையில் 7.3 சத வீதம் அதிகரித்துள்ளது. தொழிற்சாலை களின் உள்ளீடுகளை பொருத்தவரை யில் 2021-2022ம் ஆண்டைவிட 2022-2023ல் 24.4 சதவீதமாக உள் ளீடு இருந்தது. அது 21.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2022-2023ம் ஆண் டில் முதலீடு செய்யப்பட்ட மூலதனம், உள்ளீடு, ஜிவிஏ, வேலை வாய்ப்பு மற் றும் ஊதியங்கள் உயர்ந்துள்ளது.

2022-2023ம் ஆண்டில் இந்த வளர்ச்சிக்கு முக்கிய அடிப்படை ஊக்கி களாக உலோகங்கள், சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், மோட்டார் வாகனத் தொழில்கள் இருந்தன. இவை தொழில்துறை உற்பத்தியில் 58 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளன. மேலும், 2021-2022 ஆண்டுடன் ஒப்பிடும் போது உற்பத்தி வளர்ச்சி 24.5 சதவீத மாகவும்,ட் ஜிவிஏ வளர்ச்சி என்பது 2.6 சதவீதமாகவும் இருந்தது.மொத்த மதிப்பு கூட்டல் (ஜிவிஏ) அடிப்படையில் 2022-2023ம் தமிழ்நாடு, கர்நாடகா டாப் 5 இடங்களில் உள்ளன. இவை 2022-2023ம் ஆண்டில் நாட்டின் மொத்த ஜிவிஏக்கு 54%க்கு மேல் பங்காற்றியுள்ளன.

தொழிற்சாலை எண்ணிக்கை, வேலை வாய்ப்பில் தமிழ்நாடு முதலிடத் தில் உள்ளது. தொழிற்சாலைகளில் நிலையான மூலதனம் முதலீடு மூல தனம் கணிசமாக உயர்ந்துள்ளது.

இவ்வாறு ஆண்டு தொழில் ஆய் வில் தெரியவந்துள்ளது.

## முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த அரசு தொடர்ந்து நடவடிக்கை!

# அரசியல் லாபம் கருதி போராட்டம் நடத்துவதா?

### எடப்பாடி பழனிசாமிக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கண்டனம்!

**சென்னை, அக்.4-**

**“அண்டை மாநில நதிநீர் பிரச் சினையில் அரசியல் லாபம் கருதி போராட்டம் நடத்துவதா?” என்று நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் எடப்பாடி பழனி சாமிக்கு கண்டனம் தெரிவித் துள்ளார்.**

முல்லைப்பெரியாறு அணை யில் 152 அடிவரை தண்ணீர் தேக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என உண்ணாவிரதப் போராட்ட அறி விப்பு செய்துள்ள சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் விளக்க அறிக்கை வருமாறு:-

முல்லைப்பெரியாறு அணை மற்றும் பேபி அணை பலப்படுத் திய பின் அணையின் நீர் மட் டத்தை 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்தலாம் என உச்ச நீதிமன்றம் 27.02.2006 அன்று ஆணையிட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாடு அரசு முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்த தொடர்ந்து நட வடிக்கை எடுத்து வருகிறது.

முதலமைச்சர் அவர்களால் 17.06.2021- இல் இந்திய பிரத மர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை



குறித்து கேரள அரசு ஒத்து ழைக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து நானும் ஒன் றிய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து 06.07.2021 அன்று அளித்த கோரிக்கை மனுவில், அணையை பலப்படுத்த கேரள அரசிற்கு உத்தரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டதுடன், தலை மைச் செயலாளர், மற்றும் கூடு தல் தலைமைச் செயலாளர், நீர் வளத் துறை அவர்களும் சம்மந்தப்பட்ட கேரள அரசின் அதிகாரிகளுடன் தொடர்ந்து, இது குறித்து கடிதம் மற்றும் பல வழக்குகளின் மூலம் நடவடிக் கைகள் எடுத்து வந்துள்ளனர்.

### இடைக்கால மனுத் தாக்கல்!

இதற்கிடையே, தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் (I.A. 28 of 2017) இது தொடர்பாக ஒரு கூடுதல் மனுவை தமிழ்நாடு அரசு 27.11.2021 அன்று உச்சநீதிமன் றத்தில் தாக்கல் செய்தது. மேலும், 14.11.2022 மற்றும் 7.8.2023 தேதிகளில் இடைக்கால மனுக்க ளையும் தாக்கல் செய்துள்ளது.

03.03.2022 அன்று நான் கேரள நீர்வளத்துறை அமைச்ச ருக்கு எழுதிய கடிதத்தில், பேபி அணை அருகே உள்ள மரங் களை அகற்ற விரைவில் அனு மதி அளிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

முல்லைப்பெரியாறு அணை யின் மேற்பார்வைக் குழுவின் அறிவுரையின்படி 12.12.2022 மற்றும் 05.05.2023 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இரு மாநில தலைமைச் செயலாளர் கள் கூட்டத்திலும் இந்த பிரச் சினை குறித்து விவாதிக்கப் பட்டது.

### வனச்சாலை

05.05.2023 அன்று நடந்த கூட்டத்தை தொடர்ந்து, கேரள அரசு வல்லக்கடவு முல்லைப் பெரியாறு அணை வனச்சா லையை சரிசெய்வதற்கு ரூபாய் 31.24 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, 04.10.2023 அன்று தமிழ்நாடு அரசு, கேரள அரசிற்கு இத்தொ கையை செலுத்தியது. தரைப்பா லம் சீரமைக்கும் பணி 09.02.2024 அன்று தொடங் கப்பட்டு 09.05.2024 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு, கேரள அரசுக்கு கடிதங்களின் வாயிலாகவும், மேற்பார்வை குழு கூட்டங்களின் வாயிலாக வும், பேபி அணையின் எஞ்சிய பணிகளை முடிக்க தேவையான அனுமதி அளிக்க வலியுறுத்தி வருகிறது.

மீதமுள்ள பலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு, அணையின் நீர்மட்டத்தை 152 அடி வரை உயர்த்துவதன் மூலம், தமிழ்நாட்டின் உரிமை மற்றும் முல்லைப் பெரியாறு அணை பாசன விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு அரசு அனைத்து நடவடிக்கைகளை யும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் தலைமையி லான கழக அரசு தமிழ் மொழி மற்றும் மாநில உரிமைகளுக் காக எப்போதும் உறுதியான நட வடிக்கைகளை எடுத்து வந்துள் ளது. அண்டை மாநில நதி நீர் பிரச்சினையில் அரசியல் இலா பம் கருதி வெற்று அறிக்கைக ளையும் போராட்டங்களையும் அறிவிக்கும் அ.இ.அ.தி.மு.க., மக்களை குழப்பும் முயற்சிகளை விடுத்து ஆக்கபூர்வமாக செயல் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர் கள் தமது அறிக்கையில் கூறி யுள்ளார்.